தமிழ்நாட்டில் மொத்தத் தொழிலாளர்களில் 41 சதவிகிதம் பெண் தொழிலாளர்கள் இருப்பதற்கு முதல்வரின் திட்டங்களே காரணம்!

செங்கல்பட்டு - கொளவாய் ஏரியை தூர்வாரி நீரினை தூய்மைப்படுத்தி முறையாக உபயோகப்படுத்தலாம்!

சட்டப்பேரவையில் – ம.வரலட்சுமி மதுசூதனன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 19 -

செங்கல்பட்டு மாவட்டத்தில் கொளவாய் ஏரியை தூர் வாரி நீரினை முறையாக உபயோகப் படுத்தினால் செங்கல்பட்டு மற்றும் சென்னை பெருநகர மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வாகும் என்று பேரவையில் செங்கல்பட்டு தொகுதி உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவையில் செங்கல்பட்டு தொகுதி உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் பேசியதாவது:-

தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, தமிழ்நாடு முலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வருங்கால தமிழகத்தை வழிநடத்திச் செல்ல விருக்கின்ற துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முக்கடல் சூழும் குமரி முனையில் முப்பால் புலவர் வள்ளுவருக்கு வெள்ளி விழாவினை சிறப்பாக நடத்தி, திருக்குறளின் பெருமையை அடுத்த தலைமுறையான இளைய சமுதாயத்திற்குக் கொண்டு செல்லும் மிகச்சிறந்த செயலைச் செய்து, ஈடு இணையற்ற முதலமைச்சராக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார் என்பதை கீழ்க்கண்ட திருக்குறள்மூலம் நான் கூற விழைகிறேன்:

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

அதாவது, கொடை, அன்பு, செங்கோல் முறை, குடிகளைக் காத்தல் ஆகிய நான்கு செயல்களையும் உடையவர் அரசர்களுக் கெல்லாம் ஒளி போன்றவராவார் என்ற கூற்றுக் கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின்கீழ் மக்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்குகிறது.

தமிழ் நிலப்பரப்பில் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு மற்றும் இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் இருந்திருக்கின்றன என்பதும், இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப் பரப்பிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாக ஆய்வுகளின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

தமிழர்களின் பண்பாடு

மேலும், தமிழின் பெருமையையும், தமிழர்களின் பண்பாட்டையும் அனைவரும் அறிந்துகொள்ளும் விதமாக, தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியாவின் மற்ற நகரங்களிலும், மேலும் வெளிநாடுகளிலும் புத்தகக் கண்காட்சிகளை நடத்திட வேண்டும் என்ற அறிவிப்பு உலகத் தமிழர்களை பெருமையடையச் செய்திருக்கிறது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற அடிப்படைக் கொள்கையை முதன்மையாகக் கொண்டு, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அயராது உழைப்பைத் தருகின்ற அதே தருணத்தில், தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார இலக்கை அடைவதற்காக, சுற்றுலா மற்றும் அனைத்துத் துறைகளின் கட்டமைப்பை வலுப்படுத்தி, தமிழ்நாடு பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை.

மேலும், தமிழ்நாட்டின் பெருமையை எடுத்துரைக்க, 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிக்கை வெளியிட்ட செய்தியில், "உலகில் ஒரு முறையாவது பார்க்க வேண்டிய இடங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான்" என்பது நமக்கு மிகுந்த பெருமையான விஷயமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, பண்டைய நாகரிகம் ஆகியவை தமிழ் நாட்டை உலக அளவில் கொண்டு செல்லப்பட்டு இருக்கிறது என்பதை நாம் அறியலாம்.

ஐந்து பொருளாதார நிபுணர்கள்

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஐந்து பொருளாதார நிபுணர்கள் குழுவை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதாரம், அதன் வளர்ச்சி மற்றும் சமூகக் கொள்கைகளை வகுத்து, மனித வளத்தை மேம்படுத்தி, அதன்மூலமாக வேலை

வாய்ப்பை பெருக்குவதற்கும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கும் சிறந்த ஆலோசனைகளைப் பெற்று, செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக பொருளாதாரம் குறித்த ஆய்வறிக்கை (Economic Survey) தயாரித்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், தமிழ்நாட்டின் பொருளாதாரம் வலுவானதாகவும், பரந்துபட்டதாகவும், அதாவது பரவலாக்கப்பட்ட பொருளாதார நிலையில் உள்ளதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கியக் காரணங்களாக அமைவது, தமிழ்நாடு உற்பத்தியில் முதலிடம் வகிப்பது; மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் அதிவேக வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பது; தொழில் துறையில் ஈர்க்கப்பட்டுள்ள அதிக அளவு முதலீடுகள்; புதிய தொழிற் பூங்காக்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் அமைக்கப்படுதல் போன்றவற்றால் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் அதிகரித்து, அதன்மூலம் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது. பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்களில் 41 சதவிகிதம் பெண் தொழிலாளர்களாக இருப்பதும், பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை புரிகின்றது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு அதிக அளவு கடன் திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதால் இத்தகைய வளர்ச்சியை எட்ட முடிகின்றது.

மேற்கண்ட அனைத்து வளர்ச்சிக்கும்,முன்னேற்றத்திற்கும் வித்திட்டது தமிழ்நாட்டின கல்விக் கட்டமைப்புகள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால், தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருவதால், மாணவ, மாணவியர்கள் கல்வியில் ஏற்றம் கண்டு வருகிறார் கள். கல்விக்கான ஒன்றிய நிதி மறுக்கப்பட்டாலும், மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, மாநில நிதி யிலிருந்து முதலமைச்சர் அவர்கள் நிதியினை ஒதுக்கித் தந்துள்ளார். அவர் களுடைய இந்தச் செயல், அவர்களுடைய தனித் தன்மை யையும், மாணவர்களின் எதிர்காலத்தின் மீதுள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுகின்றது. அதோடு மட்டுமல்லாமல், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தியது, பள்ளிகளுக்கு அதிநவீன ஆய்வகங்கள் அமைக்கும் திட்டம், தமிழ்நாடு முழுவதும் நூறு ஆண்டுகள் கடந்த பள்ளிகளுக்கு நூற்றாண்டு விழா நடத்தி சிறப்பித்தது,

மேலும், உயர்கல்வியில் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி அல்லது கைக்கணினி விருப்பத்திற்கேற்ப வழங்கும் திட்டமும், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்து வருகின்றது.

மேலும், திறன்மிகு மையங்கள் அமைத்தல், வளர்ந்துவரும் துறைகளில் கூடுதலாக பட்டப் படிப்புகள் அறிமுகம் செய்திருப்பதும், மேற்கண்ட முயற்சிகளினால் தமிழகத்தில் உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் சேர்கை விகிதம் 52 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேலும் 10 அரசு கலைக் கல்லூரிகளை தொடங்க வேண்டுமென அறிவித்திருப்பது மிகச் சாலச் சிறந்த செயலாகும். இதன்மூலம் கல்விக்கு தமிழ்நாடு அரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தினை அறிய முடிகிறது.

"நம்மைக் காக்கும் 48" திட்டம்!

கல்வியைத் தொடர்ந்து விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி வருகின்றது. அதில் முக்கியமாக ஹாக்கி, தடகள போட்டிகள், சதுரங்க விளையாட்டு போன்றவைகளில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. சதுரங்க விளையாட்டை அனைத்து குழந்தைகளும் கற்று, போட்டிகளில் கலந்துக் கொள்ள பள்ளியளவில் உடற்கல்வி பாடத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்ற அறிவிப்பு, மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஆரோக்கியமான சாதனையாளர்கள் நிறைந்த மாணவ சமுதாயம் உருவாகும் என்பதைக் காட்டுகின்றது.

இவற்றோடு மருத்துவத் துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் "இன்னுயிர் காப்போம்", "நம்மை காக்கும் 48" போன்ற உன்னத திட்டங்களைத் தொடர்ந்து, கால மாற்றத்தினாலும், துரித வாழ்க்கை முறை மாற்றத்தாலும் தற்சமயம் அதிகரித்து வருகின்ற புற்று நோய்களை கண்டறிந்து, முழுமையான தரமான சிகிச்சை, உரிய பராமரிப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பும், குறிப்பாக கருப்பை வாய் புற்றுநோயை தடுத்திடவும் அறவே ஒழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்தில் HPV தடுப்பூசியை 14 வயதிலிருந்து அனைத்து பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்ற அறிவிப்பு மருத்துவத் துறையில் மற்றுமொரு மைல் கல்லாகும். மேலும், முதல்வர் மருந்தகங்கள் பரவலாக அமைக்கப்பட்டு, குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மற்ற துறைகளைப் போல் வேளாண்மைத் துறையையும் நம்முடைய முதல்வர் அவர்கள் முக்கியமாகக் கருதி, அதற்கு தனியாகயொரு நிதிநிலையை அறிவித்திருக்கின்றார். அந்த வேளாண்மை என்பது உணவு, கிராமப்புற பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தை மேம்பாடு அடைய செய்வதுதான் இந்த வேளாண்மையின் முக்கிய பங்காக இருக்கின்றது. தற்போதுள்ள நவீன வேளாண்மையானது, அறிவியல் தொழில்நுட்பங்களின் துணைக் கொண்டு துல்லிய வேளாண்மை, மின்னணு வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், வலைதளம்மூலம் உணரி சார் தொழில்நுட்ப வேளாண்மை போன்ற நவீன உத்திகளை பயன்படுத்தி விவசாயத்தில் குறைந்த நிலபரப்பில் அதிக மகசூல் ஈட்டி வருகின்றது.

மேலும், வேளாண்மைக்கு எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றன. அதில் குறிப்பாக, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மண்ணுயிர் காத்து, மண்ணுயிர் காப்போம் திட்டம், உழவர் நல சேவை மையங்கள், பயிர் காப்பீடு திட்டம், தமிழ்நாடு வேளாண் காடுகள் கொள்கை, மேலும் 100 முன்னோடி உழவர்களை, ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு கண்டுணர் சுற்றுலா அழைத்து செல்லப்படும் என்ற திட்டமும், முந்திரி சாகுபடியை அதிகரிக்கவும், ஊக்கப்படுத்தவும் முந்திரிக்கென்று தனியாக "தமிழ்நாடு முந்திரி வாரியம்" ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு முந்திரி விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக தமிழ்நாட்டில் கார்குறுவை சொர்ணவாரி பருவங்களில் நெல் சாகுபடியை அதிகரித்து உணவு தானிய உற்பத்தியை பெருக்கிட டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு மட்டும் குறுவை சாகுபடிக்கென சிறப்புத் திட்டம் ரூ.102 கோடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோல், மக்களுக்கு அன்றாட காய்கறி தேவைகளை நிறைவு செய்யவும் ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்ய வீட்டுத் தோட்டத்தில் காய், கனி வளர்ப்பதை ஊக்குவிப்பதற்கு ரூ.125 கோடியில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

முன்னேற்றத்திற்காகவும் சமூகத்தில் பெண்களுக்கு உரிய வளர்ச்சி மற்றும் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், தோழி பணிபுரியும் மகளிர் விடுதிகள், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மேலும் 10,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கிடவும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 37,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், மகளிர் பெயரின் பதிவு செய்யப்படும் சொத்தின் பதிவு கட்டணத்தில் 1 சதவிகிதம் குறைத்திருப்பது மகளிரின் தன்னம்பிக்கையை அதிகரித்துள்ளது. மகளிர் தினத்தன்று புதிய முயற்சியாக பெண்களுக்கு "இளஞ்சிவப்பு ஆட்டோ"க்கள் வழங்கியிருப்பது, அவர்களை அதிகாரப்படுத்துகின்ற தொலைநோக்கு திட்டங்களில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார் என்பதில் பெருமையடைகிறேன்.

இவற்றுடன் மூன்றாம் பாலினத்தவர்கள் சுயமரியாதையுடன் வாழ ஊர் காவல் படையில் வேலை வாய்ப்பு வழங்கியிருப்பதும், மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் வாய்பளித்திருப்பதும் முதல்வர் அவர்களின் மனித நேயத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. (மணியடிக்கப்பெற்றது)

மேலும், என்னுடைய தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக என்னுடைய செங்கல்பட்டு மாவட்டத்தின் கொளவாய் ஏரி, மிகப் பெரிய பரப்பளவு கொண்ட ஏரியாக, சிறந்த ஒரு நீர் ஆதாரமாக திகழ்கின்றது. ஆனால், கொளவாய் ஏரியின் நீர் மாசடைந்து, குடிநீர் பயன்பாட்டிற்கு உதவாமல் வீணாகிறது. இந்த ஏரியை தூர்வாரி நீரினை முறையாக உபயோகப்படுத்தினால், செங்கல்பட்டு மற்றும் சென்னை பெருநகர மக்களின் குடிநீர் பிரச்சினைகளுக்கும் ஒரு மிகப்பெரிய தீர்வாக அமையும் என்பதால், முதலமைச்சர் அவர்கள் இந்த நீரினை குடிநீர் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், செங்கல்பட்டு விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கைகளான, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு எனத் தனியாக அரசு விதைப் பண்ணை அமைத்துத் தர வேண்டுமென்றும், உதவி செயற்பொறியாளர் நந்தனம் தலைமை அலுவலகத்திலிருந்து செங்கல்பட்டு பகுதிக்கு இயங்க ஆவன செய்யுமாறும், tractor மற்றும் விவசாய இயந்திரங்களை அதிக மானிய விலையில் வழங்கிட வேண்டுமென்றும், பயிர் காப்பீட்டில் தர்பூசணி, சவுக்கை சேர்க்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் தங்கள் வாயிலாக நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

மறைமலைநகரில் மகளிர் பூங்கா

செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சியில் பெண்கள் பயன்பெறும் வகையில் நவீன உடற்பயிற்சி அரங்குகளுடன் கூடிய மகளிர் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

காட்டாங்குளத்தூர், ஊரப்பாக்கம் ஊராட்சியில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி, தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

நந்திவரம் மற்றும் கூடுவாஞ்சேரி நகராட்சி, சிற்பி நகர்சிங்காரம் நகர் இணைக்கும் பாலம், காமாட்சி நகர் அருள் நகர் இணைக்கும் சிறு பாலம், மீனாட்சி நகர் ஆதனூர் இணைக்கும் சிறு பாலம் ஆகிய பாலங்களை புதிதாக அமைத்துத் தர வேண்டும்.

காட்டாங்குளத்தூர் ஒன்றியம், கொண்டமங்களம் ஊராட்சியில் பக்கவாட்டு கால்வாயுடன்கூடிய புதிய சாலை அமைத்துத் தர வேண்டும்.

செங்கல்பட்டு நகராட்சி, 33வது வார்டில் பெரிய அளவிலான மழைநீர் சேகரம் மற்றம் பிரதான மழைநீர் வடிகால் அமைப்பதற்கு சிறப்பு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டம், 25 படுக்கை வசதிகள் கொண்ட அனைத்து வசதிகளுடன்கூடிய ESI பல் நோக்கு சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு திருமதி வரலட்சுமி மதுசூதனன் பேசினார்.

மாவட்டப் பொறுப்பாளர் எம்.கே.எஸ்.ரமேஷ் ராஜ் தலைமையில் - கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஏற்பாட்டில்

முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு பொன்னேரியில் வர்த்தக அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - திருச்சி சிவா எம்.பி. சிறப்புரையாற்றினர்!

திருவள்ளூர் மார்ச்.19-

திமுக மாநில மாவட்ட வர்த்தக அணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி நகர பகுதியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமை தாங்கினார் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி பாஸ்கர் சுந்தரம் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் நகர கழக செயலாளர் ஜி.ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர் பரிமளம் விஸ்வநாதன், மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் பா.தனசேகரன், கே.எஸ்.சதீஷ்குமார், ஆர். சுரேஷ்பாபு, சதீஷ்குமார், கே.என்.சுப்பிரமணி, என். எம்.கோபால், நா.ஜெகநாதன், எஸ்.சீனிவாசன், தனதாஜ், விஜயன், ரஜினிமுருகன், பொன்னேரி நகரக் கழக நிர்வாகிகள் செங்கல்வராயன், நீலகண்டன் , ஜவகர், பரிதா ஜெகன், ஆர்.ராமலிங்கம், பி.எஸ்.வாசுதேவன் ஆகியோர் வரவேற்பு உரையாற்றினார்கள்

மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ. மூர்த்தி, மு.கதிரவன், கே.வி. ஜி.உமா மகேஸ்வரி, எஸ். ரமேஷ், கே.சுப்பிரமணி, பி. வெங்கடாசலபதி, ஏ.வி.ராம மூர்த்தி, பா.செ.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

அப்போது பேசிய அமைச்சர் நாசர்

இந்தியாவில் எந்த மாநில முதல்வருக்கும் உத்திக்காத நிதிநிலை அறிக்கையை மக்களுக்கு வழங்கி முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக செயல்பட்டு மக்களை கண்ணின் இமை போல காத்துவருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்றார். பின்னர் பேசிய திருச்சி சிவா மக்கள் கேட்காமலேயே எல்லா திட்டங்களை பெரும் மனநிலையில் அமைதியாக வாழ வைத்துக் கொண்டிருக்கும் முதல்வரைப் பெற்றுள்ளனர்.இந்தியாவில் எத்தனையோ மாநிலங்களை பா.ஜ.க தனது அதிகாரத்தால் மாநில அரசுகளை செயல்படவிடாமல் கபளி கரம் செய்துள்ளது.ஆனால் எந்த காலத்திலும் அடிபணியாத ஒரு மாநிலம் என்றால் தமிழ் நாடு தான் அதற்கு காரணம் கருப்பு சிவப்பு கொடி தான் என்றார்.முதல்வர் அரசியலில் நல்ல முதிர்ச்சி பெற்று சிறந்த ஆளுமையைப் பெற்று அண்ணா சொன்னது போல மக்களிடம் செல்,மக்களோடு வாழு என்ற கோட்பாட்டை கடைபிடித்து வருகிறார் என்றார்.

இதனை தொடந்து கூட்டத்தில் பேசிய திருச்சி சிவா எம்.பி.,

தற்போதைய சூழலில் தமிழ்நாடு அரசியல் வானில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன என்றார். ஒன்றியத்தை ஆண்டு வரும் பாஜக மாநிலங்களில் மெல்ல ஊடுருவி ஆக்கிரமித்து கொண்டது எனவும், முன்பு படையெடுத்து வந்தவர்கள் நாட்டை சூறையாடுவது போல, தங்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி வெற்றி பெற்றது எனவும், எதிர்கட்சி வெற்றி பெற்றால் உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியை கைப்பற்றி வருகிறது எனவும், வடக்கில் ஆட்சியை கைப்பற்றிய நிலையில் இவர்களது சூழ்ச்சிக்கு வணங்காத மாநிலமாக தமிழ்நாடு அமைந்துள்ளது என்றார். ஒரு காலத்தில் அரசு உதவிக்காக தாலுக்கா அலுவலகத்தில் காத்திருக்க நேரிட்டது எனவும் தற்போது அப்படி கிடையாது எனவும் மாதம் பிறந்தால் பெண்களுக்கு 1000ரூபாய் சென்று சேர்கிறது, 1.25 கோடி பெண்கள் மகளிர் உரிமை பெற்று வருகின்றனர் எனவும் இந்த திட்டத்தை அறிவித்து தான் டெல்லியில் பாஜக ஆட்சியை கைப்பற்றி மாணவர்களின் நலன் கருதி காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டது எனவும், இந்த காலை உணவு திட்டத்தை ஹரியானா உட்பட பல வட மாநிலங்களில் நடைமுறைப்படுத்த தொடங்கி உள்ளனர் என்றார். 10 ஆண்டுகள் கழித்து 2035ல் உயர்கல்வியில் சேர்பவர்களின் விழுக்காடு 50ஆக வேண்டும் என ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில், தமிழ் நாட்டில் 2025ல் 48 விழுக்காடாக உள்ளது என்றார். இந்தியாவிலேயே 740 மருத்துவ கல்லூரிகள் உள்ள நிலையில் அதில் 74 மருத்துவ கல்லூரிகளுடன் அதிக மருத்துவ கல்லூரிகள் உள்ள மாநிலமாக விளங்குகிறது தமிழ்நாடு என தெரிவித்தார். டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் உள்ளவர்களே வியக்கும் வகையில், தமிழ்நாடு மருத்துவர்கள் சிறந்து விளங்கி வருகின்றனர் எனவும், தமிழ்நாட்டில் உள்ள புகழ் பெற்ற சிறந்த மருத்துவர்கள் நீட் படிக்கவில்லை என்றார். ஆரம்ப கல்வி, உயர் கல்வி, மருத்துவ கல்வி, தொழிற் கல்வி என அனைத்திலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது

சந்திராயன் 1 மயில்சாமி, சந்திராயன் 2 ஆராய்ச்சி குழு தலைவர் நாராயணன், சந்திராயன் 3 வீரமுத்துவேல், ஆதித்யா 1 நிகார் சாஜி, அக்னி 5 சங்கரி என இவர்கள் அனைவருமே அரசுப்பள்ளியில் தமிழ்வழி கல்வியில் பயின்றவர்கள் எனவும் இவர்களில் யாருக்கும் இந்தியும், சமஸ்கிருதமும் தெரியாது என்றும் இந்தி தெரியாததால் நாங்கள் யாரும் வீண் போகவில்லை என்பதை நினைவு கூர்ந்தார். தம்மை இந்தி படிக்க விடவில்லை என நிர்மலா சீதாராமன் கூறிய கருத்துக்கு இந்தி படிக்க வேண்டாம் என யாரையும் திமுக தடுத்ததில்லை என்பதை ஆணித்தரமாக பதில் கொடுத்ததாக தெரிவித்தார்.

எந்த மொழியையும் நாங்கள் வெறுப்பவர்கள் அல்ல, எனவும் எதையும் எங்கள் மீது திணிக்காதீர்கள் என்றார். ரூ போட்டதை பார்த்து பலருக்கு வயிற்றெரிச்சல் எனவும், ரூ சின்னத்தை முதலமைச்சர் ஆரம்பித்து வைத்த நிலையில் அந்த விவகாரம் நாடு முழுவதும் பேசுபொருளாகி உள்ளது என்றார். பள்ளிக்கல்வி துறைக்கு 2500 கோடி ரூபாய் தர ஒன்றிய அரசு மறுக்கிறது என்றார். ஆனால் முதலமைச்சரை பார்த்து அவன், இவன் என்றெல்லாம் அண்ணாமலை பேசி கொண்டிருக்கிறார், அதனை பொறுத்து கொள்கிறோம் எனவும், அண்ணா அறிவாலயத்தில் இருந்து வருவதால் கண்ணியமாக அரசியல் செய்கிறோம் என்றார். வட மாநிலங்களில் இருமொழியே படிப்பதில்லை எனவும், மாநிலங்களவையில் தற்போது உள்ள உறுப்பினர்களில் முன்னாள் துணை வேந்தராக இருந்தவருக்கு கூட இரண்டு மொழி தெரியவில்லை என கூறினார். தமக்கு பிடிக்காத மாநிலங்களை எப்படி துன்புறுத்தலாம் என்றும்,

ஆளுநர் மூலம் எப்படி தொல்லை கொடுக்கலாம் எனவும் பாஜக செயலாற்றி வருவதாகவும், மாநிலங்களை ஒடுக்கி ஒட்டுமொத்த அதிகாரத்தை கை யில் எடுக்க முயற்சிக்கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜர், மாநில நிர்வாகிகள் சி.எச் சேகர், வெ.அன்புவாணன், ஜி. ஸ்டாலின், ஏ.கே சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, கா.சு.ஜெகதீசன்,

ஜான் பொன்னுசாமி, மு.முரளிதரன், அபிராமி குமரவேல், பி.முத்து, பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ் உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் குமார் நன்றி உரையாற்றினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா மற்றும் இந்தி திணிப்புக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் பள்ளி பேட்டை கிராமத்தில் ஒன்றிய செயலாளர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் கோகுலக்கண்ணன், பொற்செல்வி வெங்கடேசன், எழிலரசு, உசேன், சிவக்குமார், பார்த்தசாரதி, கருணாகரன், ரமேஷ், ராஜசேகர், சிவக்குமார், பேக்கரி ரமேஷ், சிவா, விஜயா, யுவராஜ், பிரகாஷ் கண்ணன், காஞ்சனா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புழல் 24வது வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் பேத்தியும் வழக்கறிஞர் அணி கே.பி.எஸ்.அன்பரசு – மகேஸ்வரி ஆகியோரின் மகள் இயன் முறை மருத்துவர் எஸ்.ஏ. அன்புமதிக்கும், எஸ்.சிவகுமார் – மெட்டீல்டா ஆகியோரின் இளைய மகன் எஸ்.யுவராஜ் ஆகியோரின் சுயமரியாதை திருமண நிச்சயதார்த்த நிகழ்வு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் தலைமையில் பகுதி செயலாளர் ஜி.துக்காராம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.